# TATTVA BODHA (TAMIL)

# தத்வ போதம்

சுவாமி குருபரானந்தா அவர்களின்
வகுப்பின் தொகுப்பு

எழுத்தாக்கம் : ந. அவிநாசிலிங்கம்

Arsha Avinash Foundation
ஆர்வு அவிநாஷ் பவுண்டேசன்
104, 3வது வீதி டாடா பேட்
கோயமுத்துார் 641 012

Email :arshaavinash.in@gmail.com
Phone: 9487373635

# தத்வ போதம்

தத்வ போதம் என்ற நூல் ஆதிசங்கரரால் எழுதப்பட்டது. வேதாந்தம் படிக்க விரும்புபவர்களுக்கு இதனை நுழைவாயில் எனக் கூறலாம். வேதாந்தம் பயன்படுத்தும் சொற்கள் இதனில் அறிமுகப்படுத்தப்படுகிறது. அதன் மூலம் வேதாந்தத்தின் சாரத்தை ஒருவாறு அறியலாம். உபநிஷத் என்பது ஒரு காட்டில் உள்ள மரங்களைப் போன்று என்று உவமைப்படுத்தினால் தத்வ போதம் காட்டு மலர்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட மாலை போன்றதாகும். இதை சம்பிரதாயப்படி குருமுகமாகக் கற்க வேண்டும்.

இதன் முகவுரை உரைநடையில் உள்ளது. தத்வ போதத்தின் முதல் தலைப்பு புருஷார்த்தம். புருஷ என்பதன் பொருள் மனிதர்கள். அர்த்தம் என்றால் லட்சியம் அல்லது குறிக்கோள். மனிதர்களுக்கு மட்டுமே புருஷார்த்தம் உண்டு. புருஷார்த்தத்தைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு (choice) மனிதர்களால் மட்டுமே அடைய முடியும்.

புருஷார்த்தம் நான்கு வகைகள் ஆகும். தர்ம, அர்த்த , காம, மோக்ஷம். தர்மம் என்பது அறம். அர்த்தம் என்பது பொருள். காமம் இன்பம். மோக்ஷம் என்பது வீடு. வாழ்க்கையில் எதைத் தேடினாலும் இந்த நான்கிற்குள் தான் அடங்கும். அர்த்தம் என்பது வாழத் தேவையான அடிப்படைப் பொருள்களை நாடுதல்.. தேவையானது கிடைத்த பிறகு மனது சந்தோஷமாக இருக்கிறதா என்றால் இல்லை என்பதே பதில். அர்த்தம் மாத்திரம் திருப்தியைக் கொடுப்பதில்லை.

காம அதாவது சுகத்தை நாட மனம் விரும்புகிறது. பசிக்குப் பிறகு ருசிக்காக சாப்பிடுகிறோம். அவ்வாறே ஆடைகளும் கூட. தேவைக்குப் பிறகு இன்பத்தை நாடி விதவிதமான உடைகளை அணிகிறோம். தர்மப்படி வாழும் போது புண்ணியம் வந்துசேர்கிறது. புண்ணியம் அர்த்த காமத்தைத் தருகிறது. அந்த புண்ணியமே நம்மை அழியாதவஸ்துவை நாட செய்கிறது. மோக்ஷம்என்பதே அந்த நித்ய வஸ்து.

.

வீடுபேறு என்பது குறைவில்லாத நித்யமான ஆனந்தம். இது அறியாமையால் மூடப்பட்டுள்ளது. தத்வ போதத்தில் நித்யமான பொருளைப் பற்றிய ஞானத்தை அதாவது உபநிஷத்துக் கருத்துகளை, படிப்படியாக விளக்குகிறது. இந்த
நூல் பிரார்த்தனையுடன் தொடங்குகிறது.

வாஸுதேவேந்த்ரயோகீந்த்ரம் நத்வா ஜ்ஞானப்ரதம் குரும் ।
முமுக்ஷுணாம் ஹிதார்தாய தத்த்வபோதோபிதீயதே ॥

கிருஷ்ணரையும், குருவையும் வணங்கி இந்த நூல் ஆரம்பமாகிறது. முதல் சொல் கிருஷ்ணரைக் குறிக்கும் சொல். வாஸுதேவேந்த்ர என்ற சொல்லில் வாஸுஎன்பது உலகம். தேவபிரகாசிக்கின்ற இந்த்ர தலைவன் என்று பொருள். இந்திரன் அனைத்திற்கும் தலைவர். யோகிகளுக்குத் தலைவர். மாயையைத் தன் வசத்தில் வைத்திருப்பவர். இஷ்ட தேவதைகளை வணங்கும் பொழுது இவரே ஈஸ்வரனாக இருக்கிறார் என்று வணங்க வேண்டும். ஜ்ஞானப்ரதம் அறிவைக் கொடுக்கும் குருவை வணங்கி ஆத்ம ஞானத்தை உபதேசம் செய்யும் குருவை வணங்கி தத்வ போதம் என்ற தலைப்பை உடைய நூலானது என்னால் எழுதப்பட உள்ளது. முமுக்ஷுணாம் மோக்ஷத்தை விரும்புபவர்களுக்காக இந்த நூல் என்னால் எழுதப்படுகிறது. தத்வஞானம், விவேகம், மெய்பொருள் பற்றி போதனம் என்னால் எழுதப்படுகிறது என்று ஆச்சாரியர் கூறுகிறார்.

வாஸுதேவேந்த்ரயோகீந்த்ரம் என்பதை குருவின் பெயராகக் கொண்டால், அதனை கோவிந்த பகவத் பாதரை குறிப்பதாகக் கொள்ளலாம்.

ஸாதனசதுஷ்டய ஸம்பன்னாதிகாரிணாம் மோக்ஷ ஸாதனபூதம்
தத்வவிவேகப்ரகாரம் வக்ஷ்யாம ॥

அனுபந்த சதுஷ்டயம் என்பது ஒரு புத்தகம் எழுதும் முன் சொல்ல வேண்டிய 4 விஷயங்கள். 1) விஷயம் - நூல் எதைப் பற்றிப் பேசுகிறது, 2) அதிகாரி - யாருக்காக இந்நூல் எழுதப்படுகிறது, 3) பலன் - இந்த விஷயம் அதிகாரிக்கு எந்தப் பலனைக் கொடுக்கும், 4) சம்பந்தம் - இந்த நூல் படிப்பவற்கு எப்படி சம்பந்தப்பட்டுள்ளது என்பதே அந்த 4 விஷயங்கள்.

மங்கள ஸ்லோகத்திலேயே அநுபந்த சதுஷ்டயத்தை சொல்லி விடுவார்கள். சாதன சதுஷ்டயம்,உள்ள அதிகாரிகளுக்காக மோக்ஷத்திற்கு சாதனையாக இருக்கின்ற மார்க்கத்தை இந்த நூலில் சொல்லப் போகிறேன் என்று ஆச்சாரியர் கூறுகிறார். பூரண திருப்தியைக் கொடுக்கக் கூடியதை மோக்ஷம் என்கிறோம். பூரண திருப்தியை அடைய இதில் தத்த்வவிவேகப்ரகாரம் தத்துவத்தை ஆராயும் முறையைக் கூறப் போகிறேன்என்று ஆச்சாரியர் கூறுகிறார்.

ஸாதனசதுஷ்டய கிம் ?

நித்யாநித்ய வஸ்து விவேக: ।
இஹாமுத்ரார்த பலபோகவிராக: ।
ஶமாதிஷட்கஸம்பத்தி: ।
முமுக்ஷுத்வம் சேதி ।

அதிகாரி என்பவருக்கு சாதன சதுஷ்டய சம்பத்தி என்ற 4 குணங்கள் இருக்க வேண்டும். அவை விவேகம், வைராக்யம், ஸம தமாதி ஷட்க சம்பத்தி, முமுக்ஷுத்துவம்.

நித்யாநித்ய வஸ்து விவேக க:?
நித்யவஸ்த்வேகம் ப்ரஹ்ம தத்வ்யதிரிக்தம்
ஸர்வமநித்யம் ।
அயமேவ நித்யாநித்ய வஸ்து விவேக: ।

விவேகம் என்பது பிரித்து பார்த்தல் என்று பொருள்படும் . எது நித்யம் எதுஅநித்யம் என்று ஆராய்தலே நித்யாநித்ய வஸ்து விவேகம்.உலகத்தில் எந்தப் பொருளும் நித்யமாக இருப்பதில்லை. எல்லோரும் அநித்யமான உலகை அநுபவிக்கிறார்கள். நிலையானதைத் தேடுவது இல்லை. நம் மனதின் ராகத் துவேஷங்கள் விவேக சக்தியை வெளிப்படாமல் பார்த்துக் கொள்கின்றன. அறிவைப் பயன்படுத்தி கர்ம யோகப்படி வாழ்ந்தால் விவேக சக்தி கிடைக்கும். விவேகத்தின் பலன் வைராக்கியம்.

விராக: க: ?
இஹஸ்வர்கபோகேஷு இச்சாராஹித்யம் ।

வைராக்கியம் என்பது என்ன? யாரொருவர் பற்றற்று இருக்கிறாறோ (இஹ ஸ்வர்க்க போகேஷு பற்று இல்லாமை) அவர் வைராக்கியம் உடையவர். இஹ - இந்த லோகத்தில் பொருட்கள் கொடுக்கும் இன்பம். ஸ்வர்க்க போகேஷு - ஆசையை எப்படி விடுவது? எந்த ஒரு ஆசையும் சங்கல்பத்திலிருந்து தான் வருகிறது. ஆசைக்கு காரணமான சங்கல்பத்தை விட வேண்டும். ஸங்கல்பத்திற்கு காரணம் சோபனா அத்யாசம். அந்தப் பொருள் எனக்கு சந்தோஷம் கொடுக்கும் என்கிற ஒரு நினைவு. சுக ஹேது அதாவது சுகத்திற்கு காரணம் அந்த பொருள். அதனால் அப்பொருளை நினைத்து, நினைத்து ஆசை வருகிறது. நம்மை விட்டு அந்தப் பொருள் போகக் கூடாது என்று விருப்பம். அப்பொருள் நிரந்தரமாக சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று நினைக்கிறோம். இது அறியாமை.

அனைத்துப் பொருள்களிலும் சுக அம்சம், துக்க அம்சம் இரண்டும் உள்ளது. யமதர்மராஜா, காலம் இவை நம்மிடமிருந்து எல்லாப் பொருட்களையும் பிரித்து விடுவர். யார் மீது நாம் பற்று வைக்கிறோமோ அவர் இறந்து விட்டால் நமக்கு துக்கம் ஏற்படுகிறது. ஆசையை விட வேண்டுமானால், எந்தப் பொருளைப் பற்றியும் திரும்பத் திரும்ப நினைக்கக் கூடாது. அதிலுள்ள தோஷத்தைப் பார்க்க வேண்டும். அதாவது எந்தப் பொருளும் சுகஹேது என்று நினைக்கக் கூடாது. அனுதர்சனம் என்பது மீண்டும் மீண்டும் ஒரு பொருளில் உள்ள குறையைப் பற்றி சிந்தித்தல். அவ்வாறே நினைக்க நினைக்க அநித்யத்வம் நன்கு விளங்கும். அப்பொழுது ஆசை விலகும். விவேகம் பக்குவம் அடையும் போது அது வைராக்கியமாக மாறும்.

வைராக்கியத்தின் பலன்கள் 1) சாஸ்த்திர ப்ரவிருத்தி, நித்யபலன் அடைய சாஸ்திரத்திற்கு வர வேண்டும். 2) ஒரு சாதகன் சம தம இவை அடைய வைராக்கியம் உதவி செய்யும். சம அல்லது மனக்கட்டுப்பாட்டிற்கு வைராக்கியம் அவசியம். மன சஞ்சலத்திலிருந்து விடுபட வைராக்கியம் வேண்டும். எந்தப் பொருளில் விருப்பம்

இல்லாமலிருக்கிறோமோ அந்தப் பொருளிலிருந்து துயரம் இல்லை. பொருளை அனுபவிப்பதில் எவ்வளவு சுகம் உள்ளதோ அதை விட அதிக சுகத்தை வைராக்கியத்தால் அடையலாம்.

ஸமாதிஸாதன ஸம்பத்தி: கா ?
ஶமோ தம உபரமஸ்திதிக்ஷா ஶ்ரத்தா
ஸமாதானம் ச இதி ।

ஸம முதலிய சாதனைகள் யாவை? ஶம :- மனக் கட்டுப்பாடு, மன அமைதி. தம: - இந்திரியக் கட்டுப்பாடு. உபரம:- விலகி இருத்தல். கடமைகளைச் செய்தல். திதிக்ஷா :- சகிப்புத்தன்மை. ஶ்ரத்தா : நம்பிக்கை. ஸமாதானம் : மன ஒருமைப்பாடு. இவை ஆறும் ஸமாதி ஷட்க சம்பத்தி எனப்படும். இவற்றை வளர்க்க தர்ம வாழ்க்கையும், கர்ம யோகமும் படிகள்.

ஶம: க: ?
மனோ நிக்ரஹ: ।

ஸம என்பது இந்திரிய நிக்ரஹம். கர்த்தா என்பவர் ஒரு செயலைச் செய்பவர். கரணம் ஒரு செயலைச் செய்யும் கருவி. ஸாஸ்திரம் மனதை அந்தக் கரணம் என்று சொல்கிறது. நான் கர்த்தா, மனம் கரணம். கர்த்தா கரணத்தை (மனதை) தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். அதுவே ஸம: மனதிற்கு இரண்டு குணங்கள் இருக்க வேண்டும். 1) தூய்மை 2) த்ருடம் அல்லது உறுதியாக இருப்பது. மனதை எப்படி கட்டுப்படுத்த முடியும்? வைராக்கியம் மூலம் மனம் கட்டுப்படும். தமத்தை அப்யாஸம் செய்வதன் மூலமும் மனம் கட்டுப்படும். தியானப்பயிற்சி, அப்யாஸம் இவற்றின் துணை கொண்டு மனதை வசப்படுத்த வேண்டும்.

தம: க: ?
சக்ஷுராதிபாஹ்யேந்த்ரிய நிக்ரஹ: ।

தமம் என்பது வெளிமுகமாய் இருக்கின்ற புலன்களின் கட்டுப்படு. அறிவைக் கொடுக்கும் இந்திரியங்கள் ஞானேந்திரியங்கள் ஆகும். செயல்களுக்கு உதவி செய்யும் இந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் ஆகும். இவை அனைத்தும் நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். 5 ஞானேந்திரியங்கள் மூலம் மனதிற்கு நல்லவற்றை கொடுக்க வேண்டும். கர்மேந்திரியங்கள் மூலம் உடலுக்கு நன்மை கிடைக்க வேண்டும்.

இந்திரியக் கட்டுப்பாட்டை பெற 1) நான் எந்த சூழ்நிலையிலும் மாற மாட்டேன் என்று ஓர் லக்ஷியத்துடன் இருத்தல். 2) துஷ்ஸங்க நிவிருத்தி : நல்ல பண்புகளை அடைய வேண்டுமானால், நல்ல பண்புகள் இல்லாதவர்களிடமிருந்து விலகி இருப்பது. 3) விரதங்கள்

அனுஷ்டித்தல். உண்ணாவிரதம், மௌன விரதம், இனிப்பு சாப்பிடாத விரதம் என்பது போன்று விரதங்கள் எடுத்துக் கொள்ளுதல்.

இந்திரியக் கட்டுப்பாட்டின் பலன்கள்: 1) மன அமைதி 2) தியானம் (தியானத்தின் போது மன அமைதி கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்) 3) உடல் ஆரோக்கியம். பொதுவாக நாம் இந்திரியத்தை போகத்திற்குப் பயன்படுத்துவதால் அது தன் சக்தியை இழந்து விடுகிறது. அதனால் இந்திரியம் தேவைப்படும்போது அது பயன்படாது போய்விடும்.

இந்த உலகப் பொருள்களால் கிடைக்கும் ஆனந்தம் நிலையற்றது. அது நம்மை அடிமைப்படுத்துவது. விஷயானந்தம் இல்லாமல் இருக்க முடியாது என்ற நிலை வரும் பொழுது அது நம்மை அடிமைப்படுத்துவதை உணர வேண்டும். இந்த ஆனந்தத்தால் மனதில் நிறைவு ஏற்படவில்லை என்பதை அறியும் பொழுது மனது நித்யமான ஆனந்தத்தை தேடுகிறது. நித்யானந்தத்தை உயர்ந்த வேதங்கள் அறிமுகப்படுத்துகின்றன. நித்யானந்தத்தை அடைந்தபிறகு நம்முடைய மனது கீழான ஆனந்தத்திற்கு போகாது.

உபரம: க: ?
ஸ்வதர்மானுஷ்டானமேவ ।

நம்முடைய கடமையை மட்டும் செய்தல் விஷயங்களிலிருந்து விலகி இருத்தல் உபரம என்பதை ஸந்நியாசம் என்றும் பொருள் கொள்ளலாம். பொறுப்புகளை விடுதல், மற்றவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருத்தல், மற்றவர்களுக்கு சுதந்திரம் கொடுத்தல் போன்றவை உபரம ஆகும். எந்தவித பதவியையும் வைத்துக் கொள்ளாமல் இருந்தால் விசாரம் செய்ய அதிக நேரம் கிடைக்கும். பெரும்பொழுது சத்சங்கத்தில் இருக்க உதவும்.

திதிக்ஷா கா ?
ஶீதோஷ்ணஸுக து:காதி ஸஹிஷ்ணுத்வம் ।

குளிர், வெப்பம், இன்பம், துன்பம், மானம், அவமானம், புகழ், இகழ், மன்னித்தல், பழி வாங்குதல் இவைகளைச் சகித்துக் கொள்ளுதல். உலகம் இருமைகளாலானது. கஷ்டமான சூழ்நிலை இயற்கையாக வரும் பொழுது அதை நீக்க முயற்சிக்க வேண்டும். முயற்சி செய்தாலும் துயரம் வந்தால் திதிக்ஷையை பின்பற்ற வேண்டும். மனதில் வெறுப்புணர்வு இல்லாமல் சகித்துக் கொள்ளபொறுமை மிகவும் அவசியமானது. பொறுமை ஞானத்திலிருந்து வர வேண்டும். பொறுத்துக் கொள்ளுதல், பலவீனம் என்று நினைக்கக் கூடாது. திதிக்ஷையின் பலன், நாம் எடுத்துக் கொண்ட சாதனையை பூர்ணமாக அநுஷ்டானம் செய்தல், மனோ தைரியம் கிடைக்கும்.

ஶ்ரத்தா கீத்ருஶீ ?
குருவேதாந்தவாக்யாதிஷு விஶ்வாஸ: ஶ்ரத்தா ।

ஶ்ரத்தை என்பது நம்பிக்கை, அல்லது விஸ்வாசம். குரு மற்றும் வேதாந்த வாக்கியத்தில் நம்பிக்கை, கீதையில் பகவான் ஶ்ரத்தாவான் லபதேஞானம்என்று கூறுகிறார். நம்பிக்கை சாதனையை தொடர வைக்கும். ஆன்மீகத்திலும் வாழ்க்கையிலும் ஶ்ரத்தாஇருக்க வேண்டும். மனம் பக்குவமடையும் போது எங்கு எவ்வளவு தூரம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற அறிவு தோன்றும் ஶ்ரத்தையை வளர்க்க 1) ஈஸ்வரத்துவ புத்தி அதாவது வேதாந்தம் ஈஸ்வரனிடமிருந்து வந்துள்ளது. குருவாக்கியம் இறைவனிடமிருந்து வந்த வாக்கியம் என்ற நம்பிக்கை வர வேண்டும். 2)விநயம் அல்லது பணிவு இருந்தால் தான்ஶ்ரத்தை வரும்.

ஶ்ரத்தையின் பலன் : ஞானத்திற்கு தகுதியை கொடுக்கும், மன ஒருமைப்பாடு இருக்கும். அப்போது தான் வேதாந்தத்தை விசாரம் செய்ய முடியும்.

ஸமாதானம் கிம் ?
சித்தைகாக்ரதா ।

சமாதானம் என்பது எது? சித்தைகாக்ரதா லக்ஷ்யத்தில் சித்தத்தை வைத்து இருத்தல், சமதம உபரதி இவற்றால் கட்டுப்பட்ட மனதை குறிக்கோளில் வைக்க வேண்டும்.

சமாதானத்தின் பலன் : எதைச் செய்ய விரும்புகிறோமோ அதை அடைவோம். ஞான யோக சித்தி அல்லது எதை ஆரம்பித்தாலும் வெற்றி கிடைக்கும். மனோபலம் அல்லது தைரியம் கிடைக்கும் மன ஒருமைப்பாடு இருக்கும்.

முமுக்ஷுத்வம் கிம் ?
மோக்ஷோ மே பூயாத் இதி இச்சா ।
ஏதத் ஸாதனசதுஷ்டயம் । ததஸ்தத்வவிவேகாதிகரணோ பவந்தி ।

மோக்ஷம் வேண்டும் என்ற விருப்பம். விருப்பம் வளர்ந்து தீவிரமாக வேண்டும். மற்ற ஆசைகளினின்று விடுபட்டு மோக்ஷ ஆசை மாத்திரம் இருக்கும் நிலை. மோக்ஷ ஆசையை மாத்திரம் தக்க வைத்துக் கொள்ள விவேகம் வேண்டும். அதாவது நித்யா நித்ய வஸ்து விவேகம். காமம் அர்த்தம் முதலிய ஆசைகளிலிருந்து மோக்ஷ ஆசைக்கு வருவதற்கு பூர்வஜன்ம புண்ணியம் வேண்டும்.இதற்கு சத்சங்கம் உதவும்.

தத்வவிவேக: க: ?

ஆத்மா ஸத்யம் ததன்யத் ஸர்வம் மித்யேதி ।

தத்வ விவேகம் என்றால் என்ன? வேதாந்தத்தில் முதல் நுழைவாயிலான சாதன சதுஷ்டய சம்பத்தியை கர்ம யோகத்தால் அடைந்து பின் விவேக வைராக்கியத்தை அடைந்த பின் தத்துவ விசாரம் செய்ய வேண்டும்.அதை மூன்று விதமாக செய்யலாம்.

(1) ஜீவ விசாரம் : நான் யார் என்ற விசாரம்

(2) ஸ்ருஷ்டி விசாரம் : ஈஸ்வரனைப் பற்றியும், ஜீவன் வாழும் உலகத்தின் தன்மையைப் பற்றிய விசாரம்

(3) மஹாவாக்கிய விசாரம் - ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள சம்பந்தத்தை பற்றிய விசாரம்.

தத்வ விவேகம் என்றால் என்ன என்று சிஷ்யன் குருவிடம் கேட்கிறான்.

ஆத்மா சத்தியம் ஆத்மாவிற்கு வேறாக உள்ள அனைத்தும் மித்யா.

தத்வத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் தத்துவத்தில் தத்துவம் அல்லாத ஒன்று கலந்து உள்ளது என்று அறிந்து கொள்ள வேண்டும். புத்தியைப் பயன்படுத்தி விசாரம் செய்து பொய்யை நீக்கி உண்மையை எடுத்துக் கொள்ள வேண்டும். அசத்யம் எப்படி சத்யத்தில் கலக்க முடியும்? இல்லாத ஒன்று எப்படி இருக்கும் ஒன்றுடன் கலக்க முடியும்? உதாரணம் கானல் நீர், சூர்ய உதயம், கயிற்றில் பார்க்கும் பாம்பு. அநுபவத்தில் இல்லாத அஸத் - மித்யா. கயிறு ஒன்று தான் உள்ளது. குருவின் பார்வையில் கயிறு ஒன்று தான் உள்ளது. சிஷ்யனுடைய பார்வையில் ஒரு பாம்பு அந்த கயிற்றில் உள்ளது. இரண்டும் பிரிக்க முடியாத அளவு கலந்து உள்ளது. சத்யத்தின் மேல் மித்யா ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. எது சத்யம்? எது மித்யா? என்று விசாரம் செய்து மித்யாவை நீக்கி சத்யத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மாவிற்கு வேறான அனைத்தும் மித்யா என்று புரிந்து கொள்ளுதல் தத்வ விவேகம்.

ஆத்மா சத்தியம். ஆத்மா அல்லாத அனைத்தும் மித்யா.

ஆத்மா க: ?
ஸ்தூலஸூக்ஷ்ம காரணஶரீராத் வ்யதிரிக்த:
பஞ்சகோஶாதீத: ஸன்
அவஸ்தாத்ரயஸாக்ஷீ ஸச்சிதானந்தஸ்வரூப:ஸன்
யஸ்திஷ்டதி ஸஆத்மா ।

ஆத்மா என்றால் என்ன? நான், நான் என்று சொல்கிறோமே அதுவே ஆத்மா.

நான் என்பது சில சமயம் உடலை, மனதை, அறிவைக்குறிக்கிறது. எதையெல்லாம் என்னுடையது என்று சொல்லுகிறோமோ அதை "நான்" என்கிறோம்.

ஆனால் ஸ்தூல, ஸுக்ஷ்ம, காரண சரீரத்திற்கு வேறானது ஆத்மா. பஞ்ச கோஷ அதீத: 5 விதமான கோசத்திற்கும் வேறானது ஆத்மா. மூன்று வித அநுபவங்களுக்கு சாட்சியாக இருந்து கொண்டு சத்தாக, சித்தாக, ஆனந்தமாக இருந்து கொண்டு எந்த ஒரு தத்துவம் இருக்கிறதோ அது தான் ஆத்மா.

ஸ்தூல சரீரம் : நாம் பார்த்து அநுபவிக்கும் இந்த உடல் ஸ்தூல சரீரம்.

ஸுக்ஷ்ம சரீரம் - நம்முடைய மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்

காரண சரீரம் : எதனிடமிருந்து ஸுக்ஷ்ம சரீரமும், ஸ்தூல சரீரமும் தோன்றியதோ அது காரண சரீரம்.

பஞ்ச கோஷம் : 5 உறைகள், ஸ்தூல சரீரம் அன்னமய கோஷம், ஸுக்ஷ்ம சரீரம் பிராண மய கோஷம், மனோமய கோஷம், விஞ்ஞான மய கோஷம், காரண சரீரம் ஆனந்த மய கோஷம்.

ஜாக்ரத் என்பது விழிப்பு நிலை, ஸ்வப்ன அவஸ்தை என்பது கனவு நிலை. சுக்ஷுப்தி என்பது ஆழ்ந்த உறக்கம்.

ஆத்மா ஸ்தூல, ஸுக்ஷ்ம, காரண சரீரங்களுக்கு வேறானது. பஞ்ச கோஷங்களுக்கு வேறானது. மூன்று விதமான அவஸ்தைகளுக்கு வேறானது. அதுவே மூன்று வித அவஸ்தைகளுக்கு சாட்சியாக உள்ளது. ஆத்மா சத், நித்யம், என்றும் இருப்பது என்றும் அழியாதது அறிவு ஸ்வரூபம். ஆனந்த ஸ்வரூபம்.

ஸ்தூல ஶரீரம் கிம் ?
பஞ்சீக்ருத பஞ்சமஹா பூதை: க்ருதம் ஸத்கர்மஜன்யம்
ஸுகது:காதி போகாயதனம் ஶரீரம்
அஸ்தி ஜாயதே வர்ததே விபரிணமதே அபக்ஷீயதே விநஶ்யதீதி
ஷட்விகாரவதேதத் ஸ்தூலஶரீரம் ।

ஸ்தூல சரீரம் என்பது என்ன?

எது தேய்ந்து நாசத்தை அடையக் கூடியதோ அதுவே சரீரம். சரீரமே அநுபவத்திற்கு ஒரு இருப்பிடம். ஸுக துக்க அநுபவங்களை அநுபவிக்கக் கூடிய இடம் போகத்திற்கு காரணம்.

இந்த உடல் பஞ்ச பூதங்களால் உருவாக்கப்பட்டது. அதாவது 1. பூமி, 2. நீர், 3. காற்று, 4. ஆக்னி, 5. ஆகாசம் இவற்றின் கலவையே நம் உடல்.

மரணம் அடைந்தவுடன் உடல் பஞ்ச பூதங்களுடன் கலந்து விடுகிறது. பஞ்ச பூதங்கள் ஸுக்ஷ்மமாக இருந்து பிறகு ஸ்தூலமாக மாறியது. அநுபவிக்கும் நிலை ஸ்தூல நிலை. அநுபவிக்க முடியாதது ஸுக்ஷ்ம நிலை. பஞ்ச பூதங்கள பஞ்சீக்ருத நிலையை அடைந்து உடலாக மாறியது.

உடலின் தன்மை என்ன?

ஷட் விகாரம், ஆறு விதமான மாற்றங்களை உடையது. 1. அஸ்தி (இருத்தல்) 2. ஜாயதே(பிறத்தல்) 3. வர்த்ததே(வளர்தல்) 4. விபரிணமதே (மாற்றமடைதல்) 5. அபக்ஷீயதே (தேய்தல்) 6. வினஷ்யதி (அழிதல்).

ஸூக்ஷ்ம ஶரீரம் கிம் ?
அபஞ்சீக்ருத பஞ்சமஹாபூதை: க்ருதம் ஸத்கர்மஜன்யம்
ஸுகது:காதி போகஸாதனம்
பஞ்சஜ்ஞானேந்த்ரியாணி பஞ்சகர்மேந்த்ரியாணி பஞ்சப்ராணாதய:
மனஶ்சைகம் புத்திஶ்சைகா
ஏவம் ஸப்ததஶாகலாபி: ஸஹ யத்திஷ்டதி தத்ஸூக்ஷ்மஶரீரம் ।

ஸுக்ஷ்ம சரீரம் என்றால் என்ன?

ஒவ்வொரு ஜீவனுக்கும் ஸ்தூல சரீரம் இருப்பது போன்று ஸுக்ஷ்ம சரீரமும் உள்ளது. இது சுக துக்கங்கள் அநுபவிப்பதற்கான சாதனம் அல்லது காரணம். ஸுக்ஷ்ம சரீரம் உடல் மூலமாக ஸுக துக்கங்களை அநுபவிக்கிறது.

ஸுக்ஷ்மமான பஞ்ச பூதத்தின் சேர்க்கை, ஸுக்ஷ்ம சரீரம். இது 17 தத்துவங்களின் சேர்க்கை. அவையாவன: 5 ஞானேந்திரியங்கள் 5 கர்மேந்திரியங்கள் 5 பிராண தத்வம், மனம் மற்றும் புத்தி.

ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷு: ரஸனா க்ராணம் இதி பஞ்ச
ஜ்ஞானேந்த்ரியாணி । ஶ்ரோத்ரஸ்ய திக்தேவதா । த்வசோ வாயு: ।
சக்ஷுஷ: ஸூர்ய: । ரஸனாயா வருண: ।
க்ராணஸ்ய அஶ்வினௌ । இதி ஜ்ஞானேந்த்ரியதேவதா: ।
ஶ்ரோத்ரஸ்ய விஷய:ஶப்தக்ரஹணம் ।
த்வசோ விஷய: ஸ்பர்ஶக்ரஹணம் ।
சக்ஷுஷோ விஷய: ரூபக்ரஹணம் ।
ரஸனாயா விஷய: ரஸக்ரஹணம் ।
க்ராணஸ்ய விஷய: கந்தக்ரஹணம் ।

ஞானத்தை அடைய ஐந்து கருவிகள், அவை காது, கண், மூக்கு, நாக்கு, தோல் (தொடு உணர்வு சக்தி) காது என்பது காதின் கேட்கும் சக்தியையும், கண் என்பது பார்க்கும் சக்தியையும், தோல் என்பது தொட்டு உணரும் சக்தி, நாக்கு சுவைக்கும் சக்தியை, மூக்கு நுகரும் சக்தியையும் குறிக்கிறது. கேட்கும் சக்திக்கான தேவதை திக்தேவதை தொட்டு

உணரும் சக்திக்கு தேவதை வாயு, கண்ணிற்கு அதிஷ்டான தேவதை சூரியன், சுவைக்கும் சக்திக்கு வருண தேவதை, நுகரும் சக்தியை அஸ்வனி தேவதைகள் அருள்கின்றனர்.

வாக்பாணிபாதபாயுபஸ்தானீதி பஞ்சகர்மேந்த்ரியாணி ।
வாசோ தேவதா வஹ்னி: । ஹஸ்தயோரிந்த்ர: ।
பாதயோர் விஷ்ணு: । பாயோர்ம்ருத்யு: । உபஸ்தஸ்ய ப்ரஜாபதி: ।
இதி கர்மேந்த்ரிய தேவதா:।

வாசோ விஷய: பாஷணம் । பாண்யோர்விஷய: வஸ்துக்ரஹணம் ।
பாதயோர்விஷய: கமனம் । பாயோர்விஷய: மலத்யாக: ।
உபஸ்தஸ்ய விஷய: ஆனந்த இதி ।

கர்மேந்திரியங்கள் வாக், பாணி, பாத, பாயு, உபஸ்த என்பவை. வாக் என்பது பேசும் சக்தி, பாணி-கைகள், பாதம்--கால்கள், பாயு, மலத்தியாகம் செய்யும் உறுப்பு. உபஸ்தம்-சிறுநீர் கழிக்கும் உறுப்பு. வாக் தேவதை அக்னி, கைகளின் தேவதை இந்திரன், பாதத்திற்கு விஷ்ணு, மலத்தியாகம்-எமதேவன், உபஸ்த தேவதை ப்ரஜாபதி ஆகும்.

5 பிராணன்கள் : வாயு நம் உடலுக்குள் சென்று வெளி வந்தால் அபானன். உள்ளே போவதற்குப் பெயர் ப்ராணன். உள்ளே போகும் சக்தி உடல் முழுவதும் சுற்றுகிறது. இரத்த ஓட்டத்திற்கு உதவுகிறது. அது வ்யானன். ஜீரண சக்தி ஸமானன். உடலில் வழக்கமாக செயல்படும் சக்தியைத் தவிர தலைகீழாக செயல்படும் சக்தி தும்மல், வாந்தி, கண்களில் நீர் வருவது ஆகியவை இவற்றை உதானன் என்கிறோம். ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் நன்கு செயல்பட ப்ராணன் உதவுகிறது. மனம், புத்தி இவை எண்ணங்களின் தொகுப்பு. மனம் சங்கல்பம், விகல்பம் செய்கிறது. நிச்சயமான முடிவு எடுப்பது புத்தி. சில நூல்களில் இவை 19 இன் சேர்க்கையாக சொல்லப்படுகிறது. மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்காக பிரிக்கப்படுகிறது. சித்தம் என்பது மனதில் உள்ள பதிவுகள் அல்லது சம்ஸ்காரங்கள். எந்த ஒரு எண்ணம் ஸ்தூல ஸூக்ஷ்ம, காரண சரீரங்களை நான் என்று நினைக்கிறதோ அதுவே அஹங்காரம் எனப்படும்.

காரணஶரீரம் கிம் ?
அனிர்வாச்யானாத்யவித்யாரூபம் ஶரீரத்வயஸ்ய காரணமாத்ரம்
ஸத்ஸ்வரூபாऽஜ்ஞானம் நிர்விகல்பகரூபம் யதஸ்தி
தத்காரணஶரீரம் ।

காரண சரீரம் என்பது ஸூக்ஷ்மமான பஞ்சபூதம். எதிலிருந்து தோன்றியதோ அதுவே ஆகும். அது வேற்றுமையற்ற ஸ்வரூபம். எப்படி ஒரு ஆலமரத்தின் விதையினுள் அதன்,

இலைகள், கிளைகள், பூக்கள் இவையெல்லாம் நிர்விகல்பமாக, வேற்றுமையின்றி இருக்கின்றனவோ அதுபோல இந்த ஸ்தூல ஸுக்ஷ்ம சரீரங்களின் காரணம் காரண சரீரம் என்பது தெரிகிறது. விதை மரத்தின் காரணம், மூல காரணத்தில் வேற்றுமை இருக்காது. ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது காரண சரீரத்தில் ஒடுங்கி இருப்போம். காரண சரீரத்தை புரிந்து கொள்வது கடினம். அதனை சொற்களால் விளக்க முடியாது. ஸ்தூல சரீரம் பஞ்ச பூதத்திலிருந்து தோன்றியது. ஸுக்ஷ்ம சரீரம் காரண சரீரத்திலிருந்து வந்தது. காரண சரீரம் அநாதி தோற்றமற்றது. இந்த நேரத்தில் தோன்றியது என்று சொல்ல முடியாது. காலம் என்றால் என்ன? இரண்டு அநுபவங்களுக்கு நடுவில் உள்ள இடைவெளியைத் தான் காலம் என்கிறோம். காரண சரீரத்தில் நம்முடைய மனம் வெளிப்படுவதில்லை. மனம் இல்லாவிடில் அநுபவத்தைப் பற்றி பேச முடியாது. ஆழ்ந்த உறக்கத்தில் காலம் தெரியாது. காரண சரீரம் ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆத்ம தத்வம் கயிற்றைப் போன்றது. காரண சரீரம் பாம்பு. பாம்பு மறையக் கூடியது. கயிறு சாஸ்வதம். ஆத்மாவின் மீது காரண சரீரம் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. காரண சரீரம் அவித்யா ரூபம். ஆத்மாவைப் பற்றிய அறியாமை காரண சரீரத்தில் உள்ளது. காரண சரீரத்தில்தான் நமது பாவ புண்ணியங்கள் அடங்கி உள்ளது.

அவஸ்தாத்ரயம்கிம் ?
ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யவஸ்தா: |

அவஸ்தாத்ரயம் என்பது என்ன?

ஜாக்ரத் என்னும் விழிப்பு நிலை, ஸ்வப்னம் என்னும் கனவு நிலை, சுஷுப்தி என்னும் ஆழ்ந்த உறக்கம். இவை மூன்றுமே அவஸ்தா த்ரயம்.

ஜாக்ரதவஸ்தாகா ?
ஶ்ரோத்ராதி ஜ்ஞானேந்த்ரியை:ஶப்தாதி விஷயை ஶ்சஜ்ஞாயதே
இதியத்ஸாஜாக்ரதாவஸ்தா |
ஸ்தூலஶரீராபிமானீ ஆத்மாவிஶ்வ இத்யுச்யதே |

ஜாக்ரத் என்பது இப்பொழுது அநுபவிக்கும் விழிப்பு நிலை, அதாவது ஞானேந்திரியங்களை பயன்படுத்தி அநுபவிப்பது. விழிப்பு நிலையில் ஒருவன் ஸ்தூல உடலில் அபிமானம் வைக்கின்றான். 5 ஞானேந்திரியங்கள் மூலம், சப்தாதி விஷயங்கள் சேரும் பொழுது எந்த ஒரு ஞானம் ஏற்படுகிறதோ அது ஜாக்ரத் அவஸ்தா. ஸ்தூல சரீர அபிமானி ஆத்மா விஶ்வன் என்று அழைக்கப்படுகின்றான்.

ஸ்வப்னாவஸ்தா கேதி சேத் ஜாக்ரதவஸ்தாயாம் யத்த்ருஷ்டம்
யத்ஶ்ருதம் தஜ்ஜனிதவாஸனயா நித்ராஸமயே ய:ப்ரபஞ்ச:

ப்ரதீயதே ஸா ஸ்வப்னாவஸ்தா:।

ஸூக்ஷ்ம ஶரீராபிமானீ ஆத்மா தைஜஸ இத்யுச்யதே।

கனவு நிலை அல்லது ஸ்வப்னவஸ்தா என்பது ஜாக்ரத் அவஸ்தையின் அநுபவத்தினால் சித்தத்தில் ஏற்கனவே பதிவாகி இருக்கும் சம்ஸ்காரத்தினால் ஒரு உலகம் தோற்றுவிக்கப்பட்டு, அநுபவிக்கப்படுவது. ஸுஷ்ம சரீரத்தில் அபிமானம் வரும் போது கனவு நிலை வருகிறது. ஸுக்ஷ்ம சரீர அபிமானி தைஜஸன் என்று அழைக்கப்படுகிறான்.

அத:ஸுஷுப்த்யவஸ்தா கா?
அஹம் கிமபி ந ஜானாமி ஸுகேன மயா நித்ராऽனுபூயத இதி
ஸுஷுப்த்யவஸ்தா।
காரணஶரீராபிமானீ ஆத்மா ப்ராஜ்ஞ இத்யுச்யதே।

ஸுக்ஷுப்தி அவஸ்தை என்பது என்ன? ஆழ்ந்த உறக்கத்தில் அக்ஞானம் அல்லது அறியாமை உள்ளது. ஆனந்தமும் அநுபவிக்கிறோம். காரண சரீரத்தில் அபிமானம் வைப்பவன் ப்ராக்ஞன் எனப்படுகிறான்.

இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷியாக இருப்பது ஆத்மா. விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் இந்த மூன்று அவஸ்தைகளும் வந்து போகிறது என்று சொல்பவன் யார்? யார் மாறாமல் இருக்கிறாரோ அவர் தான் மாற்றத்தைப் பற்றி சொல்ல முடியும். ஆத்மா சாக்ஷி. ஒரு சம்பவத்தால் பாதிக்கப்படாமல் இருப்பவன் தான் சாக்ஷி. ஏதோ ஒரு அவஸ்தையுடன் சம்பந்தப்படும் பொழுது அதுவாக மாறி விடுகிறது. ஒவ்வொரு அவஸ்தையும் நான் என்றே நினைக்கிறேன்.

பஞ்சகோஶா:கே?
அன்னமய: ப்ராணமய:மனோமய: விஜ்ஞானமய:
ஆனந்தமயஶ்சேதி।

பஞ்ச கோஷங்கள் எவை?

கோஷம் என்பது மறைப்பது. கோஷம் ஆத்மாவை மறைக்கிறது. கோஷங்கள் நமது கவனத்தை ஈர்ப்பதால் ஆத்மாவை அறியாமல் மறைத்து விடுகிறது.

கோஷங்கள் ஐந்து. அவை அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞான மய, ஆனந்த மய கோஷங்கள்.

அன்னமய:க:?

அன்ன ரஸேனைவ பூத்வா அன்ன ரஸேனைவ வ்ருத்திம் ப்ராப்ய அன்னரூபப்ருதிவ்யாம்
யத்விலீயதே ததன்னமய:கோஶா:ஸ்தூலஶரீரம்।

ஸ்தூல சரீரம் தான் அன்னமய கோஷம். உணவின் விகாரம் தான் இந்த ஸ்தூல சரீரம். உணவினால் தான் இந்த உடல் தோன்றியுள்ளது. அன்ன ரசத்தால் தோன்றி, அன்ன ரசத்தால் வளர்ச்சி அடைந்து, அன்ன ரூபமான பூமியில் ஒடுங்குவது தான் அன்னமய கோஷம்.

ப்ராணமய:க: ?
ப்ராணாத்யா:பஞ்சவாய: வாகாதீந்த்ரியபஞ்சகம் ப்ராணமய: கோஶ: |

5 வாயு தத்துவங்களே ப்ராணமயகோஷம் ஆகும்.

மனோமய:கோஶ:க: ?
மனஶ்ச ஜ்ஞானேந்த்ரிய பஞ்சகம் மிலித்வா பவதி ஸ
மனோமய: கோஶ: |
5 ஞானேந்திரியங்களுடன் மனது சேர்வது மனோமய கோஷம்.

விஜ்ஞானமய:க: ?
புத்திஜ்ஞானேந்த்ரிய பஞ்சகம்மிலித்வா பவதி ஸ விஜ்ஞானமய:கோஶ: |

விஞ்ஞானமய கோஷம் புத்தி, 5 ஞானேந்திரியங்கள் சேர்ந்து எது இருக்கிறதோ, அது விஞ்ஞானமய கோஷம்.

ஆனந்தமய:க: ?
ஏவமேவ காரணஶரீர பூதாவித்யாஸ்தமலினஸத்த்வம்
ப்ரியாதிவ்ருத்தி ஸஹிதம் ஸத் ஆனந்தமய:கோஶ: |
ஏதத் கோஶபஞ்சகம் |
காரண சரீரமே ஆனந்தமய கோஷம், அவித்யா ரூபம்.

மதீயம் ஶரீரம் மதீயா:ப்ராணா:மதீயம் மனஶ்ச
மதீயா புத்திர்மதீயம் ஜ்ஞானமிதி ஸ்வேனைவ ஜ்ஞாயதே
தத் யதா மதீயத்வேனஜ்ஞாதம் கடககுண்டலக்ருஹாதிகம்
ஸ்வஸ்மாத்பின்னம் ததா பஞ்சகோஶாதிகம்
மதீயத்வேன ஜ்ஞாதமாத்மா ந பவதி ||

3 சரீரங்களுக்கு வேறுபட்டதாகவும், மூன்று அவஸ்தைகளைக் கடந்து 5 பிராணனுக்கு வேறாக இருப்பது ஆத்மா. ஆனால் நாம் ஆத்மாவை விட்டுவிட்டு மூன்று

சரீரங்களையும்நான் என்றோ என்னுடையது என்றோ சொல்கிறோம். 5 கோஷம், 3 சரீரம், 5 பிராணன் இவை நான் இல்லை. 17 தத்துவங்களும் என்னுடையது நான் அல்ல.

ஆத்மா தர்ஹி க: ?

எது தான் ஆத்மா என்று சிஷயன் கேட்கிறான்

ஸச்சிதானந்தஸ்வரூப: |

சத்ஸ்வரூபம், சித்ஸ்வரூபம், ஆனந்த ஸ்வரூபம், ஆத்மா.

ஸத்கிம் ?

காலத்ரயேऽபி திஷ்டதீதி ஸத் |

சத் என்றால் என்ன? முக்காலத்திலும் இருப்பது.

சித்கிம் ?

ஜ்ஞானஸ்வரூப: |

சித் என்பது என்ன? அறிவு ஸ்வரூபம் ஆகும். அறியப்படும் பொருள் மாறுகிறது. அறிவு எப்பொழுதும் இருக்கிறது. இந்த அறிவைத் தான் சித்ஸ்வரூபம் அல்லது ஞானஸ்வரூபம் என்கிறோம். எந்த ஒன்றினால் நான் அறிபவன் ஆகிறேனோ அது தான் ஆத்மா. ஞான ஸ்வரூபம் சைதன்ய ஸ்வரூபம். அறிவு நிலையானதா? அழியக் கூடியதா?சைதன்யம்

அழிவதில்லை.

ஆனந்த:க: ?

ஸுகஸ்வரூப: |

ஏவம் ஸச்சிதானந்த ஸ்வரூபம் ஸ்வாத்மானம் விஜானீயாத்|

ஆனந்தம் என்பது சுக ஸ்வரூபம். ஆனந்தம் வரையறுக்கப்படாதது. ஆத்மாவிற்கு பிரம்மன் என்று பெயர். அது காலத்தையும், இடத்தையும் கடந்து உள்ளது. ஆத்மா எதனாலும் வரையறுக்கப்படாத சுகம். ஆத்ம சுகம் நிலையானது. எது சத்சித் ஸ்வரூபமாக இருக்கிறதோ அதை நான் என்று அறிய வேண்டும். சத்சித் ஆனந்த ஸ்வரூபம் ஆத்மா என்று அறிய வேண்டும்.

அத சதுர்விம்ஶதி தத்வோத்பத்தி ப்ரகாரம் வக்ஷ்யாம:।
ப்ரஹ்மாஶ்ரயா ஸத்வரஜஸ்தமோ குணாத்மிகா மாயா அஸ்தி

ஆத்மாவை பற்றிய விசாரத்திற்குப் பிறகு 24 தத்துவ உற்பத்திப் பிரகாரம் பற்றி கூறப் போகிறோம்.

மாயா என்பது மூன்று குணங்களின் சேர்க்கை. மாயையிலிருந்து வெளிப்பட்டது உலகம். ஆகவே உலகத்திலும் 3 குணங்கள் உள்ளன. ஆவை முறையே சத்வ, ரஜோ மற்றும் தமோ குணங்களாகும். அறியும் சக்தியை சத்துவ குணம் என்றும், தமோ என்பது ஜடரூபம் மற்றும் அறிவற்ற தன்மையைக் குறிக்கும். ரஜோ குணம் என்பது செயல்படும் சக்தியைக் குறிக்கிறது. குண மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கும். இந்த மூன்று குணமும் ஒருவருக்கு மாறிக்கொண்டே இருக்கும். பிரம்மத்தைச் சார்ந்த மாயையிடமிருந்து உற்பத்தி வந்துள்ளது.

தத:ஆகாஶ:ஸம்பூத:। ஆகாஶாத்வாயு:। வாயோஸ்தேஜ:।
தேஜஸஆப:। அத்ப்ய:ப்ருதிவீ।
மாயை மாற்றத்தை அடைந்து உலகமாக மாறி உள்ளது. சிருஷ்டி :- பஞ்ச சூக்ஷ்ம பூத ஸ்ருஷ்டி முதலில் தோன்றியது. ஆகாயம், வாயு, நெருப்பு, நீர், ப்ருத்வி ஆகியவை பஞ்சபூதங்கள். இவை சூக்ஷ்ம நிலையிலிருந்து ஸ்தூல நிலைக்கு வந்தன.
மாயாவுடன் சப்தத்தை சேர்க்கும் போது ஆகாசம் தோன்றியது. ஆகாசத்திற்குள் மாயையிடம் உள்ள குணங்களோடு சப்த குணமும் உள்ளது. ஆகாசத்திலிருந்து வாயு தோன்றியுள்ளது. ஆகாசம்+ஸ்பர்ஷம்=வாயு. வாயுவிற்கு ஸ்பர்ஷம் அல்லது தொட்டு உணரும் சக்தி உள்ளது. வாயுவிலிருந்து அக்னி தத்துவம் தோன்றியது. வாயு + ரூபம் = அக்னி. அக்னிக்கு தேஜஸ் குணமும் உள்ளது. அக்னியிடமிருந்து நீர் உண்டாகியது. அக்னி+ரஸம்=நீர். நீருக்கு ரஸம் என்ற குணம் உள்ளது. நீரிலிருந்து பிருத்வி தத்துவம் தோன்றியது. நீர்+கந்தம்=பிருத்வி. அதற்கு கந்தம் அல்லது மணம் என்ற குணம் உடையது. இப்படி மாயையிடமிருந்து தோன்றிய 5 சூக்ஷ்ம பூதங்களிடமிருந்து 19 சூக்ஷ்ம சரீர அம்சங்கள் வருகிறது.

ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் மத்யே ஆகாஶஸ்யஸாத் விகாம்ஶாத் ஶ்ரோத்ரேந்த்ரியம் ஸம்பூதம்।
வாயோ:ஸாத்விகாம்ஶாத் த்வகிந்த்ரியம் ஸம்பூதம்।
அக்னே:ஸாத்விகாம்ஶாத் சக்ஷுரிந்த்ரியம் ஸம்பூதம்।
ஜலஸ்ய ஸாத்விகாம்ஶாத் ரஸனேந்த்ரியம் ஸம்பூதம்।
ப்ருதிவ்யா:ஸாத்விகாம்ஶாத் க்ராணேந்த்ரியம் ஸம்பூதம்।
ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் ஸமஷ்டி ஸாத்விகாம்ஶாத்

மனோபுத்தயஹங்காரசித்தாந்த: கரணானி ஸம்பூதானி |

ஆகாசத்தின் சத்வ தத்துவத்திலிருந்து ஞானேந்திரியங்களும் ரஜஸ்ஸிலிருந்து பிராணன் மற்றும் கர்மேந்திரியங்களும் தமோ குணத்திலிருந்து ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களும் தோன்றுகின்றன. 5 ஞானேந்திரியங்கள் 5 பூதங்களின் சத்வ அம்சத்திலிருந்து தோன்றின. ஆகாசத்தின் சத்வ அம்சத்திலிருந்து ஸ்ரோத்ர இந்திரியம் கேட்கும் சக்தி தோன்றியது. வாயுவின் சத்வ அம்சத்திலிருந்து தொடு உணர்ச்சி சக்தியும், அக்னி சத்வ அம்சத்திலிருந்து ரூபமும், நீரின் சாத்வீக அம்சத்திலிருந்து சுவைக்கும் சக்தியும், பூமியின் சாத்வீக சக்தியிடமிருந்து நுகரும் சக்தியும் தோன்றின.

5 பூதங்களின் சத்வ அம்சம் சேர்ந்து மனம் புத்தி, அஹங்காரம், சித்தம் இவற்றை உடைய அந்தக் கரணம் தோன்றியது.

ஸங்கல்ப விகல்பாத்மகம் மன:|

சங்கல்ப விகல்பாத்மகம் மனம். ஆசைப்படும் பொருளை நினைத்துக் கொண்டே இருப்பது சங்கல்பம். சஞ்சலப்படுவது விகல்பம்.

நிஶ்சயாத்மிகா புத்தி: |

இது தான் என்று நிர்ணயிப்பது புத்தி.

அஹம்கர்தா அஹங்கார:|சிந்தனகர்த்ரு சித்தம் |

அஹம் கர்த்தா என்று நினைப்பது அஹம்காரம். மனதில் ஏற்படும் பதிவுகள் சித்தம்

மனஸோதேவதா சந்த்ரமா:| புத்தே:ப்ரஹ்மா |
அஹங்காரஸ்யருத்ர:| சித்தஸ்யவாஸுதேவ: |

மனத்திற்கு அதிஷ்டான தேவதை சந்திரன், புத்திக்கு பிரம்மா, அஹங்காரத்திற்கு ருத்ரன், சித்தத்திற்கு வாஸு தேவன்.

ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் மத்யே ஆகாஶஸ்ய
ராஜஸாம்ஶாத் வாகிந்த்ரியம்ஸம்பூதம் |

வாயோ:ராஜஸாம்ஶாத் பாணீந்த்ரியம் ஸம்பூதம் |
வஹ்னே: விஷய: ராஜஸாம்ஶாத் பாதேந்த்ரியம் ஸம்பூதம் |
ஜலஸ்ய ராஜஸாம்ஶாத் குதேந்த்ரியம் ஸம்பூதம் |
ப்ருதிவ்யா ராஜஸாம்ஶாத் உபஸ்தேந்த்ரியம் ஸம்பூதம் |
ஏதேஷாம் ஸமஷ்டி ராஜஸாம்ஶாத் பஞ்சப்ராணா:ஸம்பூதா: |

5 பூதங்களின் ரஜோ குணத்திலிருந்து 5 கர்மேந்திரியங்கள் தோன்றின. ஆகாச ரஜோ குணம்: வாக், வாயு ரஜோ குணம் - கைகள், அக்னி ரஜோகுணம் - கால்களின் நடக்கும் சக்தி, நீரின்

ரஜோ குணம் - சிறுநீர் கழிக்கும் சக்தி, ப்ருத்வியின்ரஜோ குணத்திலிருந்து உபஸ்தம் தோன்றியது. சமஷ்டி ரஜோ குணத்திலிருந்து பஞ்சப்பிராணன் தோன்றியது.

ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் தாமஸாம்ஶாத்
பஞ்சீக்ருத பஞ்சதத்வானி பவந்தி |

பஞ்சீகரணம் கதம் இதிசேத் |
ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் தாமஸாம்ஶ ஸ்வரூபம் |
ஏகமேகம் பூதம் த்விதா விபஜ்ய ஏகமேகமர்தம் ப்ருதக்
தூஷ்ணீம்வ்யவஸ்தாப்ய அபரமபரமர்தம் சதுர்தாம் விபஜ்ய
ஸ்வார்தபின்னேஷு அன்யேஷு அர்தேஷு ஸ்வபாக
சதுஷ்டய ஸம்யோஜனம் பஞ்சீகரணம்பவதி |

பஞ்சீகரணம் : பஞ்ச பூதங்களின் தாமஸ அம்சங்கள் ஒவ்வொன்றும் முதலில் 2 பாதிகளாக பிரிக்கப்படுகிறது. ஒரு பாதி அப்படியே வைத்துக் கொள்ளப்படுகிறது. மற்றொரு பாதி 4 பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் 1/8 பாகங்கள். ஒவ்வொன்றும் மற்ற நான்கு பூதங்களின் அரை பாகங்களுடன் சேர்வதே பஞ்சீகரணம் எனப்படும்.
ஏதேப்ய: பஞ்சீக்ருத பஞ்சமஹாபூதேப்ய:ஸ்தூல ஶரீரம் பவதி |
ஏவம் பிண்டப்ரஹ்மாண்டயோரைக்யம் ஸம்பூதம் |

இந்த பஞ்சீகரணத்திற்கு பிறகு பஞ்ச பூதங்கள் தோன்றி, அதன் பின் ஸ்தூல சரீரங்கள் தோன்றுகின்றன. அண்டமும் பிண்டமும் தோன்றுகின்றன.

ஸ்தூலஶரீராபிமானி ஜீவநாமகம் ப்ரஹ்ம ப்ரதிபிம்பம் பவதி |
ஸஏவஜீவ:ப்ரக்ருத்யாஸ்வஸ்மாத் ஈஶ்வரம் பின்னத்வேன
ஜானாதி|
அவித்யோபாதி:ஸன்ஆத்மா ஜீவ இத்யுச்யதே |
மாயோபாதி:ஸன் ஈஶ்வர இத்யுச்யதே |
ஏவம் உபாதி பேதாத் ஜீவேஶ்வர பேதத்ருஷ்டி:யாவத்பர்யந்தம் திஷ்டதி தாவத்பர்யந்தம் ஜன்ம மரணாதி ரூப ஸம்ஸாரோ ந நிவர்ததே |

காரண பிரபஞ்சத்தையே மாயா, அவித்யா என்று சொல்கிறோம். மாயாவின் தன்மை என்ன? 1. பிரம்மாஸ்ரயா மாயா. பிரம்மனை சார்ந்திருப்பது மாயா. 2. மாயையை மித்யா ஸ்வரூபம்

என்கிறோம். மித்யா பிரம்மனை சார்ந்து உள்ளது. மாயை ஜடம். ஆனால் அது பிரம்மனிடம் உள்ள சில குணங்களை தன்னிடம் இருப்பது போல் காட்டி செயல்படுகிறது. மாயை பிரம்மனிடமிருந்து பொய்யாக தனது இருப்பை வாங்கியுள்ளது. பிரம்மனுடைய ஸ்வரூபமான சத், சித், அறிவு ஸ்வரூபம். மாயா சைதன்யத்தை கண்ணாடி சூரியனின் பிரதி பிம்பத்தைக் காட்டுவது போல, ப்ரம்மனைப் போல் செயல்பட ஆரம்பிக்கிறது.

அவித்யா என்ற உபாதியால் ஆத்மாவிற்கு இவன் என்ற பெயர் வருகிறது. மாயா என்ற உபாதியால் ஆத்மா ஈஸ்வரன் என்று சொல்லப்படுகிறான். மாயையில் பிரதிபலிக்கும் சைதன்யம் ஈஸ்வரன். ஜீவன் பிரதிபிம்பம். ஈஸ்வரன் பிம்பம் என்பதால் ஜீவன், ஈஸ்வரன் என்ற வேறு வேறான தத்துவங்கள் இருப்பது போல் தோன்றுகிறது. வேற்றுமை எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் நமக்கு ஸம்ஸாரம் இருக்கும். உபாதி வேற்றுமையால் ஜீவனும் ஈஸ்வரனும் வேறு வேறு என்ற எண்ணம் எதுவரை இருக்குமோ அவ்வளவு காலம் சம்ஸாரம் நீங்காது. ஜன்ம மரண மூல் இருந்து கொண்டே இருக்கும்.

தஸ்மாத் காரணான் நஜீவேஶ்வரயோர் பேபுத்தி: ஸ்வீ கார்யா|
ஆகையால் ஜீவ ஈஸ்வர வேற்றுமையை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

நனு ஸாஹங்காரஸ்ய கிஞ்சிஜ்ஜ்ஞஸ்ய ஜீவஸ்ய
நிரஹங்காரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஈஶ்வரஸ்ய தத்வமஸீதி மஹாவாக்யாத்கத்ம
பேதபுத்தி:ஸ்யாதுபயோ :விருத்த தர்மாக்ராந்தத்வாத் |

ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இரண்டு வித உறவு உள்ளது. 1. ஈஸ்வரன் உலகத்தையும் நம்மையும் படைத்தவர் எனவே படைத்தவர் - படைக்கப்பட்டவர் உறவு நாம் கர்மம் செய்பவர்கள், கர்ம பலனைக் கொடுப்பவர் ஈஸ்வரன். ஈஸ்வரன் ஆட்சி புரிபவர், நாம் ஆட்சி பண்ணப்படுபவர். நாம் பந்தப்பட்டுள்ளவர்கள். ஈஸ்வரன் முக்தன். அனைத்து நியதிகளும் ஈஸ்வரனுக்கு உட்பட்டு உள்ளன. மற்றொரு கோணத்தில் பார்க்கும் போது அனாத்மாவாகப் பார்த்த காரண, ஸுக்ஷ்ம, ஸ்தூல சரீரங்கள் மூன்றும் ஆத்மாவை ஆதாரமாய்க் கொண்டுள்ளன. ஆத்மா + அநாத்மா = ஜீவன். ஆத்மா நித்ய ஸ்வரூபம், அழியாதது. ஸத், சித், அறிவு ஸ்வரூபம். ஜீவனின் காரண, ஸுக்ஷ்ம, ஸ்தூல சரீரங்கள் ஆத்மாவை ஆதாரமாய்க் கொண்டுள்ளன. காரண சரீரத்தினுள் ஜீவனின் புண்ணிய பாபங்கள் உள்ளன. சூக்ஷ்ம சரீரம் சைதன்யத்தை பிரதிபலிக்கும் சக்தி உள்ளது. கண்ணாடி சூரிய பிம்பத்தை பிரதிபிம்பிக்கின்றது போல் சித் நம் மனதில் பிரதிபலிக்கும் பொழுது அது சிதாபாசம் எனப்படுகிறது. மனது ஜடம் ஆனால் சித் எனும் ஆத்மாவின் பிரதிபிம்பம் (சிதாபாசம்) மனதில் பிரதிபலிக்கும் பொழுது மனது உணர்வு ரூபமாக ஆகிறது. ஒரு ஜீவன் இறக்கும் பொழுது சிதாபாசமும் சூக்ஷ்ம

சரீரமும் ஸ்துால சரீரத்தை விட்டுப் போய் விடுகின்றன. ஜீவன் உயிருடன் இருக்கும் பொழுது சிதாபாசம் உடலுக்கு உணர்வைக் கொடுத்து உலகை அநுபவிக்க வைக்கிறது.

காரண சரீரத்திற்கும் மாயைக்கும் உபாதி என்ற பெயரும் உள்ளது. அனாத்மாவை உபாதி என்று அழைக்கிறோம். ஆத்மாவைத் தவிர அனைத்தும் உபாதி. எந்த ஒன்று மற்றொன்றின் அருகில் அமர்ந்து தன் தன்மைகளை அதற்குள் பொய்யாகப் புகுத்துமோ அதற்கு பெயர் உபாதி. ஸ்படிகத்திற்கு அருகில் சிவப்பு புஷ்பத்தை வைத்தால் ஸ்படிகம் சிவப்பு நிறத்தை உடையது போன்று காணப்படும். சிவப்புப் புஷ்பம் உபாதி. ஸ்துால ஸுக்ஷ்ம காரண சரீரங்கள், மாயை முதலியவை தங்களுடைய குணங்களை ஆத்மாவின் குணங்கள் போல் காட்டுகின்றன.

மஹா வாக்கிய விசாரம் :

ஜீவன், ஈஸ்வரன், ஜகத் இவற்றின் உண்மை தன்மை என்ன? நான் யார்? உலகம் எப்படிப்பட்டது? நியதிகளை உருவாக்கிய ஈஸ்வரனின் தன்மை என்ன? போன்ற கேள்விகளுக்கான விசாரம்.

ஈஸ்வரனை ஆராய்ச்சி செய்தால் ஈஸ்வரன் = பிரம்மன் + மாயா. ஈஸ்வரன் சமஷ்டி. மாயை ஸர்வக்ஞ: சிதாபாசம் அல்பக்ஞ: ஆத்மாவின் அடிப்படையில் (மாயையை விலக்கி விட்டால்) ஈஸ்வரனும், ஜீவனும் ஒன்றே. ஆதாரத்தின் அடிப்படையில் ஜீவனும், ஈஸ்வரனும் ஒன்று தான். இதை அறிவதே ஞானம். இந்த ஞானத்தை எந்த வாக்கியம் உபதேசிக்கிறதோ அது தான் மஹா வாக்யம். இந்த ஜீவ ஈச்வர ஐக்கியக் கருத்து தான் உபநிஷத்தின் மையக் கருத்து.

ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் என்ற மூன்று சாதனைகளின் சேர்க்கையால் ஞானத்தை அடைய முடியும். ஸ்வரணம் அக்ஞான நிருவித்தியை கொடுக்கும். மனனம் சந்தேகங்களை நிருவித்தி செய்து கொள்ள உதவும்.

எவ்வாறெல்லாம் சந்தேகங்கள் தோன்றும்? ஈஸ்வரன் பற்றிய வர்ணனையை படித்து விட்டு, அப்படிப்பட்ட ஈஸ்வரனுக்கும் அகங்காரத்தை உடைய அல்ப அறிவைக் கொண்டுள்ள ஜீவனுக்கும் எப்படி ஐக்கியம் உண்டாக முடியும் என்ற சந்தேகம் ஏற்படும். சரீரத்தில் அபிமானம் வைத்துள்ள ஜீவனுக்கும் அனைத்தையும் அறிந்த ஈஸ்வரனுக்கும், அஹங்காரம் நிறைந்த ஜீவனுக்கும், அஹங்காரமே இல்லாத ஈஸ்வரனுக்கும் எப்படி ஐக்கியம் உண்டாக முடியும். தத்வமசி என்ற மஹா வாக்கியம் அபேத புத்தியை எப்படி உண்டாக்கும்? போன்ற சந்தேகங்கள் எழும்.

அபேத புத்தி ஏற்படுத்தக் கூடிய தத்வமஸியை விசாரம் செய்ய வேண்டும். மனனம் செய்ய வேண்டும். தத் ஈஸ்வரன். த்வம் ஜீவன். அசி ஒன்று என்பதைக் கேட்டவுடன் ஞானத்திற்கு பதில் முரண்பாடுகள் தோன்றுகிறது.

இதிசேத் ந ।
ஸ்தூல ஸூக்ஷ்ம ஶரீராபிமானீ த்வம்பத வாச்யார்த:।
உபாதி வினிர்முக்தம் ஸமாதி தஶாஸம்பன்னம் ஶுத்தம்
சைதன்யம் த்வம் பத லக்ஷ்யார்த:।
ஏவம் ஸர்வஜ்ஞத்வாதி விஶிஷ்ட ஈஶ்வர:தத் பத வாச்யார்த:।
உபாதி ஶூன்யம் ஶுத்த சைதன்யம் தத் பத லக்ஷ்யார்த:।
ஏவம் ச ஜீவேஶ்வரயோ: சைதன்யரூபேணாऽபேதே பாதகாபாவ:।

ஜீவன் அநாத்மாவை தியாகம் செய்து ஆத்மாவில் திளைக்க வேண்டும். அதை லக்ஷ்யார்த்தம் என்கிறோம். உபாதி நீக்கப்பட்ட ஞான நிலையில் கிடைத்த சுத்த சைதன்யம், ஸ்துால ஸுக்ஷ்ம, காரண சரீர அபிமானங்களை விட்டு, சைதன்யம் ஒன்றே உண்மை என்பதை புரிந்து கொள்வது லக்ஷ்யார்த்தம். தத்பதத்தின் வாச்யார்த்தம் ஈஸ்வரன் என்ற வார்த்தைக்கு அனைத்து சக்தியையும் உடையவர், அனைத்தும் அறிபவர், உலகத்திற்கு காரணமானவர். ஆனால் ஈஸ்வரனின் லக்ஷ்யார்த்தம், ஈஸ்வரன் உபாதியற்றவர், மாயையை விலக்கி விட்டால் உலகத்திற்கு காரண பூதம் என்ற பொருளும் மறைந்து விடும். சுத்த சைதன்யம் ஒன்றே லக்ஷ்யார்த்தம். இவ்வித விசாரத்தின் மூலம் ஜீவ ஈச்வர பேதமின்மையை அறியலாம். பேதம் உள்ளது என்பது விபரீத பாவனை. விபரீத பாவனை பழக்க தோஷத்தால் வருகிறது. ஞானத்தின் மூலம் விபரீத பாவனையை நீக்க வேண்டும். 3வது சாதனை நிதித்யாசனம். ஞானத்தை ஞான நிஷ்டையாக்க மேற்கொள்ளும் பயிற்சி. இதன் மூலம் மரண பயம், பொறாமை, பாதுகாப்பு இன்மை இவை நீங்கும்.

ஞானத்தால் கிடைக்கும் பலன் என்ன?

முக்தி அடைவது. ஜீவன் உயிருடன் இருக்கும் போதே முக்தி அல்லது விடுதலை. சோகத்திலிருந்து, நிறைவின்மையிலிருந்து, ஆழ்மனக்குறைகளிலிருந்து, பணக் கஷ்டத்திலிருந்துவிடுதலை கிடைக்கும் ஆழ் மனதில் இன்னமும் செய்து முடிக்கப்பட வேண்டியகாரியம் இருக்கிறது என்ற எண்ணம் மறையும். சாவதற்குத் தயாரான நிலை மனநிறைவு இருக்கும். ஞானத்திற்கு பிறகு ப்ராரப்தம் முடிந்தவுடன் நம் சரீரம் அழிந்து விடும். மீண்டும் பிறக்க வேண்டியதில்லை. பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை ஞானத்தினால் கிடைப்பது ஜீவன் முக்தி. கர்மவினைகள் நீங்குவது விதேக முக்தி.

ஏவம் ச வேதாந்தவாக்யை:ஸத்குருபதேஶேன ச ஸர்வேஷ்வபி பூதேஷுயேஷாம் ப்ரஹ்ம புத்திருத்பன்னாதே ஜீவன்முக்தா:இத்யர்த:।

ஞானத்தை குருமுகமாகத் தான் பெற வேண்டும். குருமுகமாக பெற்று விசாரம் செய்ய வேண்டும். குரு ஸ்ரோத்திரியராகவும், பிரம்ம நிஷ்டராகவும் இருக்க வேண்டும்.

நனுஜீவன்முக்த:க: ?
யதா தேஹோऽஹம் புருஷோऽஹம் ப்ராஹ்மணோஹம் ஶூத்ரோऽஹமஸ்மீதி த்ருட நிஶ்சய:
ததா நாஹம்

ப்ராஹ்மண: ந ஶூத்ர: நபு ருஷ:கிந்து அஸங்க:ஸச்சிதானந்த ஸ்வரூப: ப்ரகாஶரூப:
ஸர்வாந்தர்யாமீ சிதாகாஶரூபோऽஸ்மீதி த்ருட நிஶ்சய
ரூபோऽபரோக்ஷஜ்ஞானவான் ஜீவன்முக்த: ||

ப்ரஹ்மைவாஹமஸ்மீத்யபரோக்ஷஜ்ஞானேன
நிகில கர்ம பந்தவினிர்முக்த: ஸ்யாத் |

எப்படிப்பட்ட ஞானம் கிடைக்க வேண்டும்?

எல்லா ஜீவராசிகளிடத்தும் யாருக்கு பிரம்மன் என்ற புத்தி ஏற்பட்டுள்ளதோ அவர்கள் தான் ஜீவன் முக்தர்கள். திருப்தியுடன் இருப்பவர்கள் ஜீவன் முக்தர்கள். பரமாத்மா இருக்கிறார் என்ற ஞானத்தை பரோக்ஷ ஞானம் என்றும் நான் பிரம்மனாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்வது அபரோக்ஷ ஞானம் என்றும் சொல்லப்படுகிறது. அபரோக்ஷ ஞானம் உறுதியாக வேண்டும். ஆத்மாவான எனக்கு குறைகள் இல்லை. உடல் மரணத்திற்கு உட்பட்டது. நோய்வாய்படக் கூடியது. அறியாமையில் இருக்கும் பொழுது இந்த சரீரம் தான் நான் என்பது எவ்வளவு நிச்சயமாகத் தெரிந்ததோ அதே அளவு நிச்சயத்துடன் ஞானம் வந்த பிறகு நான் ஆத்மா என்பதில் நிச்சயம் இருக்க வேண்டும். நான் சத்சித் ஆனந்த ஸ்வரூபன். பூர்ணமானவன், பிரகாசித்துக் கொண்டு இருப்பவன் என்பதை அறிபவன் ஜீவன் முக்தன்.

கர்மாணி கதிவிதானி ஸந்தீதிசேத்
ஆகாமி ஸஞ்சிதப்ராரப்த பேதேன த்ரிவிதானி ஸந்தி |

குரு கேட்கிறார். கர்மங்கள் எத்தனை விதங்கள்? ஆகாமி, சஞ்சித, பிராரப்த என்று மூன்று விதமாக உள்ளது.

ஜ்ஞானோத்பத்த்யனந்தரம் ஜ்ஞான தேஹக்ருதம் புண்யபாபரூபம்
கர்ம யதஸ்திததாகாமீத்யபிதீயதே |

ஸஞ்சிதம்கர்மகிம் ?
அன்ந்தகோடி ஜன்மானாம் பீஜபூதம் ஸத்யத்கர்ம ஜாதம்
பூர்வார்ஜிதம் திஷ்ட்திதத் ஸஞ்சிதம் ஜ்ஞேயம் | ப்ராரப்தம் கர்மகிமிதிசேத் | இதம் ஶரீரமுத்பாத்ய இஹலோக ஏவம்
ஸுகதுகாதி ப்ரதம்யத் கர்ம
தத்ப்ராரப்தம் போகேன நஷ்டம் பவதி
ப்ராரப்த கர்மணாம் போகாதேவக்ஷய இதி |

ஜன்மாந்தரங்களில் விதவிதமான புண்ணிய, பாபங்கள் செய்துள்ளோம். புண்ணியம் அதிகம் செய்திருந்தால் அதன் விளைவாக அடுத்த ஜென்மத்தில் தேவ சரீரம் கிடைக்கும். பாபம் அதிகமாகமானால் மரமாகவோ, மிருகமாகவோ பிறப்போம். பாப புண்ணியங்கள் சம அளவு இருக்கும் போது மனித ஜென்மம் கிடைக்கிறது. மனித ஜென்மத்தில் செய்த புண்ணிய பாபங்கள் சஞ்சித மூட்டையாகிறது. இந்தக் குவியல் எண்ணிலடங்காதது. இதனின்று எந்த புண்ணியம் அல்லது பாபம் எப்பொழுது வெளிப்படும் என்பதும் தெரியாது.
கர்மங்கள் ஆகாமி, பிராரப்தம், சஞ்சிதம் என்று 3 விதமாக உள்ளது.
அறியாமையால் பாபம் புண்ணியம் செய்யலாம். ஆகாமி கர்மம், இந்த ஜென்மத்தில் இந்த சூழ்நிலையில் செய்யும் கர்மம்.

சஞ்சித கர்மம் என்பது அனந்த கோடி ஜென்மங்களுக்கு விதையாக இருப்பது. பூர்வ ஜென்மத்தில் சம்பாதிக்கப்பட்டது. சஞ்சிதத்தினால் தான் மனித ஜென்மம் கிடைக்கும். பிராரப்தகர்மா எதுவென்று கேட்டால் சஞ்சிதத்திலிருந்து வெளிப்படுவது பிராரப்தம்.

வெளிப்படும் பாப புண்யத்தை பிராரப்தம் என்கிறோம். ப்ராரப்தம் நம்மால் தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலையை உண்டாக்கும். மேலும் நாம் புதிய புண்ணிய பாபங்களை செய்து கொண்டே இருக்கிறோம். இந்த ஜன்மத்தில் செய்யும் கர்மம் ஆகாமி எனப்படும். பிராரப்தம் முடிந்தவுடன் மனிதனின் மரணம் ஏற்படுகிறது. உடனே ஆகாமி சஞ்சிதத்தில் கலந்து விடுகிறது. ஆகாமி இந்த ஜென்மத்திலும் வெளிப்படலாம். அல்லது வேறு ஜென்மத்திலும் வெளிப்படலாம். ப்ராரப்தத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் மாற்ற முயற்சித்து விட்டு பிறகு தான் பிராரப்தம் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஞானியும், அஞ்ஞானியும் அவனிடமிருக்கும் சஞ்சிதத்தை பிராரப்தமாக அனுபவிக்கிறான். புதிய புண்ணிய பாபம் ஆகாமி சஞ்சிதத்துடன் சேர்கிறது. செயல் செய்து கர்ம பலனைத் தீர்க்க முடியாது.

உலகில் விதவிதமான வேற்றுமைகளைப் பார்க்கிறோம். உடல் ஊனம், புத்தி வேற்றுமை என நிறைய வேற்றுமைகள் உள்ளன. நம்முடைய கர்ம பலத்தினால் தான் வேற்றுமை. நம்முடைய இன்ப துன்பங்களுக்கு நாம் தான் பொறுப்பு. ஒருவன் அதர்மம் செய்யும் பொழுது வெற்றி, சுகம் அநுபவித்தால் அந்த அதர்மம் துயரத்தைக் கொடுக்கும். வெற்றிக்குக் காரணம் அவன் ஏற்கனவே செய்து வைத்த புண்ணியம், துக்கம் வரும் போது அவன் அதர்மம்செய்யவில்லை. முன்னால் செய்த அதர்மம் துக்கத்தைக் கொடுக்கிறது. தர்மம் புண்ணியத்தைக் கொடுக்கிறது. தர்மம் தான் நம்மை ரக்ஷிக்கும். ஒரு ஜீவனுக்கு த்ருஷ்ட பலன், அதிருஷ்ட பலன், புண்ணிய பாபக் குவியல், சஞ்சித கர்மம் முதலியன ப்ராரப்தம் உடலையும், சூழ்நிலையையும் கொடுக்கிறது. பிராரப்தத்தை தீர்க்கும் பொழுது

புதியதாக சேர்ப்பது ஆகாமி. ஆகாமி மரணத்திற்குப் பிறகு சஞ்சிதத்துடன் கலந்து விடுகிறது. பிறகு புண்ணிய பாபம் கலந்து ப்ராரப்தத்துடன் அடுத்த ஜென்மம் கிடைக்கும்.

கர்ம வினைகளின் பலன் தான் உறவினர்கள், சூழ்நிலைகள், கர்மம் ஜடம், ஈஸ்வரன் தான் பலனைக் கொடுப்பவர். நேற்று எப்படி இருந்தேன் என்பதைப் பொறுத்து இன்று எப்படி இருக்கிறேன் என்பதைப் பொறுத்து நாளை எப்படி இருப்பேன் என்று நிர்ணயிக்கப்படுகிறது. எனவே எனது எதிர்காலத்திற்கு நானே பொறுப்பு. அவரவர் கர்மத்தை அவரவர் தான் அநுபவிக்க வேண்டும். கர்த்தா தான் போக்தா. நமக்கு கஷ்டங்கள் வந்தால் ஏன் வந்தது? என்று தெரிந்தால் செய்யாமல் இருக்கலாம். தண்டனை என்று நினைக்கக் கூடாது. நாம் செய்த வினையை நாம் அநுபவிக்கிறோம் என்று ஏற்றுக் கொள்ளும் மனநிலை கிடைக்கும். அதர்மம் செய்பவன் இன்பம் அநுபவிக்கிறான் என்றால் முன்னால் செய்த புண்ணியத்தை அநுபவிக்கிறான் என்று பொருள்.

ஞானியின் புண்ணிய பாபம் என்ன ஆகிறது? ஞானம் எவ்வாறு 3 வித கர்மங்களை எப்படி நீக்கப் போகிறது என்று விளக்கப் போகிறார். எல்லா செயல்களுக்கும் (காயிகம், வாசிகம், மானஸம்) பலன் உண்டு. கர்ம பலன் இரண்டு வகைப்படும். 1) கண்ணுக்குத் தெரியும் பலன் அல்லது திருஷ்டபலன். கண்ணுக்குத் தெரியாத பலன் அதிருஷ்ட பலன். செயலின் பாவனை சரியானதாக இருந்தால் அதிர்ஷ்ட பலன் புண்ணியம். பாவனை சரியாக இருந்து பலன் எதிர்மறையாக இருப்பினும் புண்ணியம் கிடைக்கும். பாவனை தவறாக இருந்தால் பாபம் கிடைக்கும்.

ஸஞ்சிதம் கர்ம ப்ரஹ்மைவாஹமிதிஶ்சயாத்மக ஜ்ஞானேன
நஶ்யதி |

ஆத்ம ஞானத்தின் பலன் அனைத்துக் கர்மங்களும் நாசம் அடைகின்றன.
ஞானியின் சஞ்சித கர்மம் ஞானத்தினாலேயே எரிக்கப்படுகிறது. நான் பூரணமான பிரம்மன் என்ற ஞானத்தினால் தான் சஞ்சித கர்மம் அழியும்.

ஆகாமிகர்ம அபிஜ்ஞானேன நஶ்யதி கிம் ச ஆகாமி கர்மணாம்
நலினீ தலகதஜலவத் ஜ்ஞானினாம் ஸம்பந்தோ நாஸ்தி |

ஞானத்திற்குப் பின் ஆகாமி கர்மம் உள்ளது என்று சொல்ல முடியாது. எப்படி மிருகத்திற்கோ குழந்தைக்கோ புண்ணிய பாபம் கிடையாதோ அதேபோல ஞானிக்கும் புண்ணிய பாபம் இல்லை. கர்மவினை ஞானியைத் தொடாது.
தாமரையின் இலை தண்ணீர் போல ஞானிக்கும் கர்மத்திற்கும சம்பந்தம் இருக்காது.

ஞானி உடலை விட்டவுடன் அனைத்து கர்மங்களும் விலகி விடுகின்றன.
ஞானிக்கும், அக்ஞானிக்கும் பிராரப்தத்தில் மாற்றம் இல்லை. நாம் அநுபவித்துத் தான் தீர்க்க வேண்டும். சில ஞானிகளுக்குக் கூட நோய் வருகிறது. வில்லிலிருந்து அம்பை விட்டால் அது எவ்வளவு தூரம் போக வேண்டுமோ அங்கு போய் தான் நிற்கும். அநுபவித்துத் தான் தீர்க்க வேண்டும். ஞானி தன்னை துக்கி ஆகாமல் காத்துக் கொள்வார். உடல் வேதனைப்பட்டாலும் உள்ளத்தால் துயரம் அநுபவிக்க மாட்டார்.

கிஞ்சயேஜ்ஞானினாம் ஸ்துவந்தி பஜந்தி அர்சயந்திதான் ப்ரதி
ஜ்ஞானிக்ருதம் ஆகாமி புண்யம் கச்சதி।

யார் ஒருவர் ஞானியை பூஜிக்கிறார்களோ அவர்களுக்கு ஞானியினால் செய்யப்பட்ட புண்ணியமான ஆகாமி சென்று விடுகிறது. ஞானியை வணங்கும் பொழுது சித்த சுத்தி கிடைக்கிறது.

யே ஜ்ஞானினம் நிந்தந்தி த்விஷந்தி து:க ப்ரதனம் குர்வந்தி தான்ப்ரதிஜ்ஞானிக்ருதம் ஸர்வமாகாமிக்ரியமாணம்
யதவாச்யம் கர்மபாபாத்மகம் தத்கச்சதி।

யார் ஞானியை நிந்தனை செய்கிறார்களோ துக்கத்தை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு ஞானியினால் செய்யப்பட்ட, செய்யப் போகிற சாஸ்திரத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாத பாபம் போய் சேருகிறது.

ததா ச ஆத்மவித்ஸம்ஸாரம் தீர்த்வா ப்ரஹ்மானந்தமிஹைவ
ப்ராப்னோதி।

ஞானத்தின் பலன் இரண்டு வகை. ஜீவன் முக்தி, விதேக முக்தி. உயிருடன் இருக்கும் பொழுதே நிறைவு கர்மத்திற்கு ஆதாரமான அஹங்காரத்தை ஞானி நீக்கி விடுகிறான்.
ஆத்ம ஞானி சம்சாரத்தை கடந்து அறியாமையை கடந்து அத்யாசத்தை கடந்து ஆனந்தமயமான ப்ரம்மத்தை இங்கேயே அடைகிறான். உயிரோடு இருக்கும் பொழுதே அடைகிறான். நிறைவுடன் இருக்கிறான்.
தரதி ஶோகமாத்மவித் இதி ஶ்ருதே:

இதற்கு என்ன ஆதாரம் என்றால், சாந்தோக்ய உபநிஷத்தில் பூம வித்யா என்ற தலைப்பில் நாரதர், நான் பல கலைகள் அறிவேன். அனைத்து சாஸ்திரங்கள் அறிவேன். ஆனால் ஆத்ம வித்யா படித்ததில்லை அதனால் நான் துன்பப்படுகிறேன் என்று கூறினார். பின் சனத்குமாரரிடம் பிரம்மவித்யாவை கற்று தரதி ஸோகமாத்மவித் என்று கூறினார். அதாவது ஆத்மாவை அறிந்தவன் சோகத்தை கடக்கிறான். துயரத்தைக் கடக்கிறான். உயிரோடு

இருக்கும் பொழுதே சோகத்தைக் கடக்கிறான். ஞானிகள் துயரப்படுவதில்லை. அதற்குக் காரணம் ஆத்ம ஞானம். பிராரப்தம் முடிந்தவுடன் மீண்டும் பிறப்பதில்லை.

தனும் த்யஜது வா காஶ்யாம் ஶ்வபசஸ்ய க்ருஹேSதவா |
ஜ்ஞான ஸம்ப்ராப்தி ஸமயே முக்தோSஸௌ விகதாஶய: |
இதி ஸ்ம்ருதேஶ்ச |

பலர் மரண காலத்தில் எங்கு இறக்கிறோம், எந்த நேரத்தில் இறக்கிறோம் என்பதை பொறுத்து அடுத்த ஜென்மம் உள்ளது என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒரு ஞானி தன் உடலை காசியில் விட்டாலும் அல்லது நாயை சமைத்து உண்பவனின் வீட்டில் இறந்தாலும் ஞானத்தை அடைந்த சமயத்திலேயே அவன் முக்தியை அடைந்து விட்டான்.

இதி தத்த்வபோத ப்ரகரணம் ஸமாப்தம் ||

**www.arshaavinash.in**
**WEBSITE FOR FREE E-BOOKS ON VEDANTA & SANSKRIT**



**Pujya Swami Dayananda Saraswati launched Arsha Avinash Foundation's website www.arshaavinash.in on Dec 31, 2014.**

**All the E-books available on the website can be downloaded FREE!**

**PUJYA SWAMI DAYANANDA SARASWATI- A BRIEF BIOGRAPHY BY N. AVINASHILINGAM. It is available in English, Tamil, Hindi and Portuguese.**

**SWAMI PARAMARTHANANDA'S TRANSCRIBED CLASS NOTES: Available class notes are Introduction to Vedanta, Tattva Bodha, Bhagavad Gita (3329 pages), Isavasya Upanisad, Kenopanisad, Kathopanisad, Prasna Upanisad, Mundaka Upanisad, Mandukya Upanisad with karika, Aitareya Upanisad, Chandogya Upanisad, Brihadarnyaka Upanisad (1190 pages), Kaivalya Upanisad, Brahma Sutra (1486 pages), Atma Bodha, Vivekachudamani (2038 pages), Panchadasi, Manisha Panchakam, Upadesha Saara, Saddarsanam, Jayanteya Gita, Jiva Yatra, Dhanyastakam, Advaita Makaranda, Dakshinamurthy Stotram, Drg Drsya Viveka, Niti Satakam, Vairagya Satakam and Naishkarmya Siddhi.**

**BRNI MEDHA MICHIKA'S BOOKS ON SANSKRIT GRAMMAR: Enjoyable Sanskrit Grammar Books- Basic Structure of Language, Phonetics & Sandhi, Derivatives (Pancavrttayah), Dhatukosah, Astadhyayi, Study Guide to Panini Sutras through Lagu Siddhanta Kaumudi, Sanskrit Alphabet Study Books- Single Letters, Conjunct Consonants.**

**There are many more books and articles on Indian culture and Spirituality, Chanting, Yoga and Meditation. There are also books in Tamil on Vedanta.**

**Arsha Avinash Foundation**
**104 Third Street, Tatabad, Coimbatore 641012, India**
**Phone: +91 9487373635**
**E mail: arshaavinash@gmail.com**
**www.arshaavinash.in**